# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்
திரு இரா.சு. மாரியப்பன், B.E., M.B.A.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி மாவட்டம்
51, மேலரதவீதி, தூத்துக்குடி-2.
தொலைபேசி 0461 2322651
மின்னஞ்சல் dtcpttkddistrict@gmail.com

பெறுநர்
தலைவர்
பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

ந.க. எண் 407/2021 தூமா அ-2, நாள் 23.04.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052, சித்திரை 10

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தூத்துக்குடி மாவட்டம் - ஒட்டப்பிடாரம் வட்டம் - பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி - பாஞ்சாலங்குறிச்சி கிராமம் - சர்வே எண் 581/2-ல் 12150 சமீ (3 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி /இசைவு - ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. திரு திரு டி. கண்ணன் என்பவரது விண்ணப்பம் நாள் 18.02.2021, 05.04.2021 மற்றும் 21.04.2021
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 18.03.2021 மற்றும் 20.04.2021
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 19799/2020 போ, நாள் 24.12.2020
4. அரசாணை எண் 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.06.2004
5. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017
6. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை கடிதம் ந.க. எண் தி3/11680/2020, நாள் 31.12.2020
7. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.01.2020
8. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ4(3) துறை, நாள் 23.09.2020
9. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ4(1) துறை, நாள் 09.12.2020
10. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 30.08.2017

11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 13686/2017 எல்எ1, நாள் 08.09.2017
12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 14.10.2019
13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 05.02.2020

--------

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி, பாஞ்சாலங்குறிச்சி கிராமம், சர்வே எண் 581/2-ல் 12150 சமீ (3 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 18.03.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1-ல் சுட்டிய 05.04.2021 நாளிட்ட மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திரம் எண் 637/2021, நாள் 25.03.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/தூமாஅ எண் 34/2021 என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண் 9(ஆ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக்கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக

விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2. (a) பார்வை 9-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7-ல் கண்ட TNCDBR 2019 விதி எண் 47 (1)-ன் படியும் மாநகராட்சி /நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the changes for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant directly.
(b) மாநகராட்சி /நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permist of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm warm drams, water supply facilities by constructing required OHT, provide necessary street lights, etc., as per the standards specified by the local body".
3. (EWS) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020-ன் படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
4. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
5. "The Tamil Nadu Government in G.O. (Ms) No. 112, Housing and Urban Development Department, dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act, 2016). The Promoter has to advertise, market, book, sell or offer for sale, are invite person to purchase in any manner, any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority-ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6. பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லாத பகுதி /திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண் 3-ன் படி மனை ஒன்றுக்கு

ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்)-த்தை திரும்ப பெறமுடியாக கூராய்வு கட்டணத் தொகையையும் மற்றும் விதி எண் 9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

7. பார்வை 4 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.18000/- (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) அரசு கணக்கில் 20.04.2021-ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது

8. This order is passed subject to the outcome of the Madras High Court Madurai Bench writ petition W.P. (MD) No. 8948 of 2019

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ.)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி - 2

**இணைப்பு**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
4 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திரம்

**நகல்**

1. திரு டி. கண்ணன்
   த-பெ, தங்கப்பன்,
   7, காளியம்மன் கோவில் முதல் தெரு,
   கடம்பூர் - 628 714 — பத்தி ஒன்று மட்டும்
2. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல் தளம், எழும்பூர், சென்னை
3. இருப்பு கோப்பு (வரைபடம் 1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)

பிளான் அப்ருவல் - ப எண்.53

(111)

111

பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. Y. கோமதி[illegible]

மு.மு. நாள்: 13.4.2022

பொருள் : ~~கட்டிட~~ மறுபதிவு அனுமதி ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்
பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி பாஞ்சாலங்குறிச்சி கிராமம்
சர்வே எண். 581/2 கதவு பிளாட் எண். ல்
அங்கீகரிக்கப்பட்டு ~~கட்டிட~~ மறுபதிவு அனுமதி உத்திரவு அளித்தல் தொடர்பாக.

பார்வை: 1)திரு. த. கண்ணன்
த/பெ தங்கப்பன்
7. காளியம்மன் கோவில் தெரு
கடம்பூர் - 628714

என்பவரது

விண்ணப்பம் நாள்

2) தமிழ்நாடு அரசு ஊராட்சிகள் சட்டம் 1994
ஊராட்சி கட்டிடங்கள் சட்டம் 1997 ஊரக வளர்ச்சித்துறை
சி2 அரசு ஆணை எண். 255 நாள்: 18-8-97

தமிழ்நாடு ஊரக வளர்ச்சிதுறை அரசாணை எண். 255 நாள்: 18-8-97 (தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகள் 1997ன் படி திரு/திருமதி. த. கண்ணன் த/பெ. தங்கப்பன் என்பவருக்கு ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் பாஞ்சாலங்குறிச்சி ஊராட்சி பாஞ்சாலங்குறிச்சி கிராமம் சர்வே எண். 581/2 ல் கதவு/பிளாட் எண்.

புதிதாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள அமைப்பு படங்களில் உள்ளபடி ~~கட்டிட~~ மறுபதிவு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

செல்லான் நம்பர்: 6254 - 3000 -
6255 - 60000 -
6256 - 68000 -
131000/-

தொகை: 131000/- நாள்: 13.4.2022

கீழே விவரிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கும் விண்ணப்பதாரர் உரிமையாணை பெற்றவர் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும். ஊராட்சி தலைவருக்கு மேற்படி நிபந்தனைகளை அமல் படுத்துவதற்கு உரிமையுண்டு.

கீழே நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கீகாரமும், அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது அனுமதி உத்திரவு கால அளவு 13.04.2022 ம் தேதியிலிருந்து

—— ம் தேதி வரை கொடுக்கப்படுகிறது.

[signature]

கீழ்க்கண்ட நிபந்தனைகட்கு மனுதாரர் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும்.

1. திருத்தியோ திருத்தாமலோ அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள அமைப்பு படங்கள் படியும் விவரக்குறிப்பு படியும் ஒருவித மாறுதல் இன்றியும் கண்டிப்பாய நடந்து கொள்ள வேண்டும். மாறுதலாக கட்டவேண்டியிருந்தால் ஊராட்சி மன்றத்திற்கு முன்னதாக மனுச்செய்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். முன்னதாக ஊராட்சியின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் அங்கீகாரம் செய்யப்பட்ட அமைப்பு படங்களின்படி இல்லாமல் வேலை ஏதாவது செய்தால் கட்டிடத்தின் சொந்தக்காரர் மீது குற்றச்சாட்டு செய்வதுடன் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடம் அப்புறப்படுத்துவதற்கு உள்ளாகும் அல்லது பார்வை மூன்றின்படி அபராதம் விதிக்கப்படும்.

2. அனுமதி ஆணையில் கொடுக்கப்பட்டிருக்கும் கால அளவுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிட்டால் ஊராட்சி நிர்வாக அதிகாரிக்கு மீண்டும் அமைப்பு படத்துடன் மனுச்செய்து புதிதாக அனுமதி திரும்பி பெற்றுக்கொண்டாலன்றி எவ்வித வேலையும் தொடர்ந்து செய்யக்கூடாது. மேற்கண்ட அனுமதி ஆணை புதுப்பித்துக்கொள்வதற்கு முன் அனுமதியாணையில் கண்ட கால அளவு முடிவதற்கு 30 நாட்களுக்கு முன்னதாக மனு செய்து மறுபடியும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அனுமதி பெற்றுக் கொள்ளாமல் கட்டிட வேலையை தொடர்ந்து நடத்தினால் கட்டிடத்தின் சொந்தக்காரர் மீது குற்றச்சாட்டு தொடரப்படுவதுடன் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடம் அப்புறப்படுத்தப்படுவதற்கும் உள்ளாகும். தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ 10/- வீதம் அபராதமாகவும் வசூலிக்கப்படும்.

3. அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இடம் விவரக்குறிப்பு படங்களை அனுசரித்து அன்றி மற்றப்படியாவது 1997ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட சட்டம் நகர் ஊரமைப்புச் சட்டம் அல்லது யாதொரு துணை விதி அல்லது உத்திரவுக்காகிலும் விரோதமாகவாவது எந்த வேலையும் செய்யக்கூடாது.

4. கட்டிடம் கட்டும் போது சுவர் கட்டியோ எல்லைச்சுவர் கட்டியோ படிகள் அமைத்தோ நிழல் தட்டிகள் கட்டிட பிதுக்கங்கள் (லெதர் போர்டு, பால்கனி) முதலியவை அமைத்தோ பொதுத்தெருவில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக் கூடாது. அனுமதியின்றி அப்படி செய்து கொள்ளும் எந்த அபகரிப்புக்கும் உரிமையானவை வழங்கப்படமாட்டாது. தமிழ்நாடு ஊராட்சியின் கட்டிட விதிகள் பிரகாரம் உத்தேசிக்கப் பட்டுள்ள அல்லது அனுமதிக்கப்பட்டுள்ள ஊராட்சி திட்டத்திற்கு விரோதமில்லாமலும் அல்லது திட்டத்தின் ஒழுங்கு விதிகள் விளம்பரம் முதலியவைகளுக்கு விரோதமாக எந்த வேலையும் செய்யக் கூடாது.

5. 1997ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சியின் கட்டிடவிதிகள் கட்டிடவேலை முடிவடைந்த உடன் ஊராட்சி மன்றத் தலைவருக்கு 15 நாட்களுக்குள் முடிவடைந்த அமைப்புப்படங்களுடன் அறிக்கை அனுப்பவேண்டும்.

6. தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகள் பொது சுகாதார நகர் அமைப்புச் சட்டம் அல்லது இதரச் சட்ட விதி ஆணை விதி இவைகளின்படி ஊராட்சி மன்றத் தலைவரால் கொடுக்கப்படும் யாதொரு அறிக்கையின் படியாகிலும் அவரால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட யாதொரு உத்திரவாகிலும் சொல்லியிருக்கக்கூடிய மாறுதல்கள் செய்ய மேற்படி கட்டிடத்தின் சொந்தக்காரர் கடமைப்பட்டிருக்கிறேன்.

7. இந்த அனுமதி ஆணை தவறான தகவலின் பேரில் பெற்றுக்கொண்டிருந்தாலும் இது சம்பந்தமாக ஊராட்சி சட்டம் அல்லது வேறு எந்தச் சட்டம், விதி, துணைவிதி முதலியவற்றின்படி கட்டிடத்தின் சொந்தக்காரர் தண்டனைக்குள்ளாகியிருந்தாலும் அனுமதி ஆணையில் கண்ட எந்த நிபந்தனைகளையாவது அவர்மீறி நடந்தாலும் இந்த அனுமதி ஆணையை ரத்து செய்யவோ நிறுத்தி வைக்கவோ ஊராட்சி மன்றத்தலைவருக்கு உரிமையுண்டு.

8. அங்கீகரிக்கப்பட்ட அமைப்புப்படங்களின் ஒரு தொகுதி பிரதிகளையும் வேலை நடந்து கொண்டிருக்கும் போது எல்லாக் காலங்களிலும் கட்டிட மனையில் வைத்திருக்க வேண்டும். ஊராட்சித் தலைவராவது அவரிடமிருந்து ஆதரவு பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது பார்வையிடுவதற்காக எல்லாக்காலங்களில் அமைப்புப்படங்கள் கிடைக்கக்கூடிய படியும் கட்டிடம் திறந்திருக்கும் படியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

9. தெருவை அனுசரித்து போடப்பட்டிருக்கும் காலி இடத்தில் வேறு எந்தவிதமான கட்டிடமும் கட்டக்கூடாது.

10. ~~கட்டடத்திற்கு~~ மனைக்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது.

11. மனுதாரர் பப்ளிக் ஹெல்த் ஆக்ட் 26 மற்றும் 33வது பிரிவன் படி சான்றிதழ் பெறாமல் கட்டிடத்தில் குடிபெறவோ குடிவைக்கவோ கூடாது.

12. வீடு கட்டும் இடம் தொழில் பிரகடனப்படுத்தப்பட்ட இடத்தில் இருத்தல் கூடாது. நில உச்சவரம்பு சட்டத்தில் அடங்கிய இடமாக இருத்தல் கூடாது. மேலும் இது போன்ற எவ்வகை வழிகளிலும் கையகப்படுத்தப்பட்டிருப்பின் இவ்வனுமதி செல்லாது.

13. தேவையான குடிநீர் வசதியினை மனுதாரரே சொந்தப் பொறுப்பில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

14. கட்டிட அனுமதி கோரப்பட்டுள்ள மனுதாரரே சொந்தப் பொறுப்பில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

15. கட்டிட அனுமதி கோரப்பட்டுள்ள இடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் அமைவதால் அதற்கான திட்டஅனுமதியை............................................உள்ளூர் திட்டக்குழுமத்திடம் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு: வரைபடம்

பெறுநர்

J. Kamaladevi
தலைவர் 13/4/2022
ஊராட்சி மன்றம்
பாஞ்சாலங்குறிச்சி

நகல் ஊராட்சி உதவியாளர்

............................................ஊராட்சி மன்றம்

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate